## மத்திய மாகாண சபை அரச சேவைகள்ஆணைக்குழு

## மத்திய மாகாண சபை அரச சேவையில் சட்ட அலுவலர் தரம் iii பதவிக்காக ஆட்சேர்த்தல் - 2013

மத்திய மாகாண சபையின் பிரதான செயலாளர் அலுவலகத்தில் வெற்றிடமாக உள்ள சட்ட அலுவலர் பதவிக்கு இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட தகுதியுடைய ஆண், பெண் இருசாராரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2013.12.13 ஆந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ கிடைக்கும் பொருட்டு "செயலாளர், மத்திய மாகாண அரசசேவை ஆணைக்குழு, த.பெ. இல 144, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி" எனும் முகவரிக்குப் பதிவுத்தபால் மூலமாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சட்ட அலுவலர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்தல் - 2013" எனக் குறிப்பிடல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தை www.psc.cp.gov.lk என்ற எமது இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

(i) மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு மற்றும் ஆட்சேர்ப்பு அறிவித்தலுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பப்படிவம் அல்லது அது சம்பந்தமான ஆவணங்கள் தபாலில் தொலைந்தமை பற்றி செய்யப்படும் முறைப்பாடுகள் பற்றி கவனம் செலுத்தப்படமாட்டாது.

(iii) ஏற்கனவே அரச சேவையில்/ மாகாண அரச சேவையில் உள்ள அலுவலர்கள் தம் விண்ணப்பங்களை தத்தமது நிறுவனத் தலைவரின் ஊடாக அவரின் விதப்புரையுடன் அனுப்புதல் வேண்டும்.

02. **சம்பள அளவுத்திட்டம் : -**

ரூபா 22,935-10x645-8x790-17x1050-53,555

(அரச நிர்வாகச் சுற்றறிக்கை 6/2006 க்கு அமைய SL 1-2006 ஆரம்பநிலை)

03. **தகைமைகள்**

(விண்ணப்பம் கோரப்படும் கடைசித் திகதிக்கு முன்னதாக இத்தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்)

**கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் : -**

பல்கலைக் கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சட்டத்தரணி பட்டம் பெற்றிருத்தல் அல்லது இலங்கையில் சட்ட அறிஞராக நீதிமன்ற கடமைகளில் ஈடுபட்டிருத்தல்

**அனுபவம்:**

இலங்கையில் சட்ட அறிஞராக நீதிமன்ற கடமைகளில் 03 வருடங்களுக்கு குறையாமல் முழு நேரக் கடமைகளில் ஈடுபட்டிருத்தல்.

04. **பொது தகைமைகள்:-**

i. விண்ணப்பதாரி இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

ii. விண்ணப்பதாரி விண்ணப்பம் கோரப்படும் கடைசித் திகதியில் மத்திய மாகாண சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அண்ணளவாக உடன் முந்திய 03 வருடங்கள் தொடர்ச்சியாக நிரந்தர வதிவுடையவரென உறுதிப்படுத்தல் வேண்டும்.

iii. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று விண்ணப்பதாரி 25 வயதுக்கு குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**05. ஆட்சேர்ப்பு முறை: -**

அரசாங்க சுற்று நிருபத்தில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளுக்கேற்ப, மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் ஆட்சேர்த்தல் செயற்றிட்டத்தில் குறிப்பட்டுள்ள புள்ளி வழங்கள் முறையினை அடிப்படையாகக் கொண்டு நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்படுவர். இது பற்றிய இறுதி முடிவு எடுக்கும் உரிமை மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குறியதாகும்.

**06. சேவையில் ஈடுபடுத்தும் நிபந்தனைகள் மற்றும் நியதிகள்** :

i. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உரித்துடையது. விதவைகள் அனாதைகள்/ தபுதாரர் அனாதைகள் ஓய்வூதிய சம்பள நிதியத்துக்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

ii. தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10-12 வரையுள்ள பிரிவுகள் ஏற்புடையதாவதுடன் தாபனக் கோவையில் காலத்துக்கு காலம் செய்யப்படும் திருத்தங்கள், அரச நிருவாக சுற்றறிக்கை மற்றும் மாகாண அரச சேவை சம்பந்தமான மத்திய மாகாண கௌரவ. ஆளுனரினால் அனுமதி அளிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுவர்.

டப்.எம்.கே.கே.கருணாரத்ண
செயலாளர்
மாகாண அரசசேவை ஆணைக்குழு
மத்திய மாகாணம்

2013 நவம்பர் மாதம் 19 ஆம் திகதி
த.பெ. 114, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி

## மாதிரி விண்ணப்பப்படிவம்

(A4 அளவுடைய கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி பூரணப்படுத்தவும்.)

## மத்திய மாகாண சபை அரசாங்க சேவையில் சட்ட அலுவலர் பதவிக்காக ஆட்சேர்த்தல் - 2013

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்) [ ]

**1.0** (I) முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர்: -
(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)

(II) முழுப்பெயர் : -
(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)

(III) முழுப் பெயர் : -
(சிங்களத்தில்/ தமிழில்)

**2.0** (I) நிரந்தர முகவரி : -
(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)

(II) நிரந்தர முகவரி : -
(சிங்களத்தில்/ தமிழில்)

**3.0** (I) பிறந்த திகதி : ஆண்டு: [ | | | ] மாதம்: [ | ] திகதி : [ | ]

(II) விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு வயது :
வருடங்கள் : [ | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

**4.0** தேசிய ஆளடையாள அட்டை இல: [ | | | | | | | | | ]

**5.0** பால் (ஆண்/ பெண்): -

**6.0** சமூகநிலை : (திருமணமானவர்/ திருமணமாகாதவர்): -

**7.0** நீங்கள் இலங்கைப் பிரசை பரம்பரையிலா அல்லது பதிவுவழியிலா? : -

**8.0** தற்பொழுது அரச சேவையில்/ மாகாண அரச சேவையில் பதவியொன்றில் ஈடுபட்டிருப்பின் அது பற்றிய விபரம் :

(i) பதவி : -

(ii) நிரந்தரமானதா/ தற்காலிகமானதா? : -

(iii)ஓயவூதியம் உரித்துடையதா?/ அற்றதா? : -

(iv)பதவி நிரந்தரமாக்கப்பட்டுள்ளதா? : -

(v) தற்பொழுது சேவையாற்றும் இடம்: -

(vi)மாதாந்தச் சம்பளம்: -

**9.0** கல்வித் தகைமைகள் : -

| பட்டம் / பரீட்சை | பட்டம்/பரீட்சை செல்லுப்படியாகும் திகதி | பாடங்கள் | தரம் | பல்கலைக்கழகம் அல்லது நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10.

11. ஏனைய மேலதிக தகைமைகள்: - …………….

12. பெற்றுள்ள சட்டத்துறை தொடர்பான அனுபவம் பற்றிய விபரம்: -

13. நீங்கள் எப்பொழுதாவது எத்தகையதுமான ஒரு குற்றச் சாட்டுக்காக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப் பட்டுள்ளீர்களா? ................
ஆம் எனில் விபரங்களை குறிப்பிடவும் …………

14. நீர் அரச சேவையிலிருந்து விலக்கப்பட்டுள்ளீரா? …………………
ஆம் எனில் விபரங்களை குறிப்பிடவும் …………

15. இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும், உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன். இங்கு தரப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் பிழையானவை அல்லது பொய்யானவை என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவந்தால் நான் இப்பதவிக்குத் தெரிவுசெய்யும் தகுதியை இழப்பேன் எனவும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் தெரியவரின் எவ்வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கு அறிவேன்.

……………………………………
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :- ……………

16. **<u>விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்</u>**

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ................................ என்பவரை தனிப்பட்ட முறையில எனக்குத் தெரியும் என்றும், அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ................... ஆந் திகதியில் இட்டார் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

………………………………..
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரது கையொப்பம்
(உத்தியோகப்பூர்வ முத்திரையைப் பதிக்கவும்)

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப் பெயர் : - ……………………..
பதவி: - ………………………………
திகதி: - …………………….

(விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், படைதாங்கு சேவையின் ஆணைபெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அலுவலரொருவர், ரூபா 230,700 ஆண்டுச் சம்பளத்தை அல்லது அதற்குக் கூடிய அரசின் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரொருவர் சான்றுப்படுத்த வேண்டும்.)

**17. <u>அரசாங்க அல்லது மாகாண அரச சேவையிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்காக திணைக்கள/ நிறுவனத் தலைவரின் விதப்புரை</u>**

I. இவ்விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ள திரு./திருமதி/செல்வி .................................... என்பவர் இவ்வமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில்.................................ஆக சேவையாற்றுபவரான இவரின் வேலை மற்றும் நடத்தை திருப்திகரமானது எனவும், அவரது சேவைக்காலத்தினுள் (எச்சரிக்கை தவிர்ந்த) வேறு எவ்வித ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் ஆளாகவில்லை எனவும், அவரது சுய விபரக்கோவையின் அடிப்படையில் நியமனக் கடித இலக்கம் …………….. எனவும், அவர் மேற்குறிப்பிட்ட விபரங்கள் யாவும் சரியானவை என பரீட்சித்துப் பார்த்ததாகவும், அவை சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

II. இப்பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் அவரைச் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் குறிப்பிடுகிறேன்.

………………………………..
திணைக்கள/ நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
(உத்தியோகப்பூர்வ முத்திரையைப் பதிக்கவும்)

திகதி : - …………………..
பெயர் : - …………………..
பதவி : - …………………..
இடம் : - …………………..